

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜுலை 05, 2018 | புரட்சி 17 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00


## ‘தமிழ்நாடு மாணவர் கழக’ பயிற்சி முகாம்

# காஞ்சியில் கருத்துச் செறிவுடன் நடந்தது

*தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் மாணவர்களுக்கான பயிற்சி ஜுன் 30, ஜுலை 1, 2018 தேதிகளில் காஞ்சிபுரத்தில் மக்கள் மன்றத்தில் சிறப்புடன் நடைபெற்றது. சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக ஒத்துழைப்புடன் தமிழ் நாடு மாணவர் கழகம் நடத்திய இந்தப் பயிற்சி வகுப்பை மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவகுமார் ஒருங்கிணைத்தார். பயிற்சியில் 45 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 20 பேர் மாணவிகள்.*



முதல் நாள் காலை 10 மணியளவில் மக்கள் மன்றத் தோழர்களின் புரட்சிகரப் பாடல்களுடன் வகுப்புகள் தொடங்கின. தோழர்கள் அறிமுகத்தைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாணவர் பயிற்சியின் நோக்கங்களை விளக்கினார்.

தொடர்ந்து கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு, ‘கல்வி - நம்முன் உள்ள சவால்கள்’ என்ற தலைப்பில் பேசினார். ‘உயிரினம் சிந்திக்கத் தொடங்கியபோதே உருவாகிவிட்டது கற்றல் செயல்பாடு. மூளையின் புரிதல் சக்தியோடு கற்பது வழியாக செயல்படக் கூடிய கல்வி செயல்பாட்டை பள்ளியில் அடைத்த தால் பள்ளிக் கல்வி மட்டுமே கல்வி ஆகி விட்டது. பள்ளி கல்வியைக் கற்றுத் தருகிறதா என்றால், அது கற்காமல் பார்த்துக் கொள்கிறது. வகுப்பறைக்கு வெளியே சமூகக் கல்வியை நாம் தேட வேண்டும். பள்ளிக்குள் சுருங்கிய கல்வி, இப்போது போட்டித் தேர்வுக்குள் மேலும் சுருக்கப்பட்டு விட்டது. வங்கி களில் பணத்தைப் போட்டு பிறகு தேவைப்படும் போது பணத்தை எடுப்பதுபோல் மூளையில் திணித்தல் வழியாக டெப்பாசிட் செய்யப்பட்ட கல்வியை பிறகு அதை வெளியில் எடுத்துப் பயன் படுத்தப்படும். ‘வங்கிக் கல்வி முறை’ தான் இப்போது நடக்கிறது என்கிறார் ஆய்வாளர் பவுலிட் பிராய்ட். இந்த ‘டெபாசிட்’ கல்வியை விடுதலை கல்வியாக மாற்ற வேண்டும். அதுதான் மக்களுக்கு அதிகாரத்தை வழங்கும் கல்வியாக மாறும். ஆசிரியர் என்பவர் மாணவர் களுக்கு பாடங்களைத் திணிப்பவர் அல்ல; அவர் ஒரு அரசியல் சமூக செயற்பாட்டாளராக மாணவர் களிடம் தன்னம்பிக்கையை விதைப்பவராக இருத்தல் வேண்டும் என்றார் பிரின்ஸ் கஜேந்திர பாபு. இந்தப் பின்னணியில் ‘நீட்’ தேர்வு, பல்கலைக்கழக மான்ய குழுவுக்கு மாற்றாக நடுவண் அரசு கொண்டுவர இருக்கும் சட்டம், இந்திய மருத்துவக் குழுவுக்கு மாற்றாக நடுவண் அரசு கொண்டு வர இருக்கும் ‘தேசிய மருத்துவ ஆணையம்’ ஆகியவற்றின் வழியாக பறிக்கப்படும் மாநில உரிமைகள் மற்றும் ஒடுக்கப் பட்டோர் கல்வி பெறுவதற்கான தடைகளை விளக்கினார்.

கல்வியை அடிப்படை உரிமையிலிருந்து பிரிக்க முடியாது என்று முதலில் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், அடுத்தடுத்த தீர்ப்புகளில் 14 வயதுக்கு மேல் அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கு அரசிடம் நிதி கிடையாது என்றும் கல்வித் துறை சார்ந்த படிப்பு என்பதைவிட தொழில் சார்ந்தது என்பதால் அரசு தவிர தனியாரும் கல்வி நிறுவனங்களைத் தொடங்க லாம் என்றும் தீர்ப்பளித்ததை சுட்டிக் காட்டினார். தொடர்ந்து பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி சந்திக்கும் நெருக்கடிகளை எடுத்துக் கூறினார். மாணவர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

இடைவேளை உணவுக்குப் பிறகு ‘தோழமை’ அமைப்பின் இயக்குனர் தேவா - மாணவர்களின் திறன் மேம்பாடு குறித்து விரிவாகப் பேசினார். புகார் தருவதற்கான விண்ணப்பங்களை எழுதப் பின்பற்ற வேண்டிய முறைகள் - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவது எப்படி; அதற்கான படிவங்களைப் பூர்த்தி செய்யும் முறை; எந்தெந்தப் பிரச்சினைகளில் தகவல்களைக் கேட்க முடியும்? மறுக்கும்போது மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கியதோடு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கு தகவல் உரிமைச் சட்டத்தைத்தான் பயன்படுத்திய தனது அனுபவங்களையும் அதற்குக் கிடைத்த வெற்றி களையும் விளக்கினார்.

தேனீர் இடைவேளைக்குப் பிறகு விடுதலை இராசேந்திரன் தனியார் துறையில் இடஒதுக் கீட்டின் அவசியம் குறித்துப் பேசினார். இந்தக் கோரிக்கைக்காக அன்றைய தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ச்சியாக நடத்திய ‘சம்பூகன் சமூக நீதிப் பயணம்’, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி முதல் முறையாக ஆட்சிக்கு வந்தபோது தனியார் துறையில் இடஒதுக்கீட் டுக்காக சட்டம் கொண்டு வருவதற்கு செய்த முயற்சிகள்; பெரும் தொழில் நிறுவனங்களின் எதிர்ப்பால் அது கிடப்பில் போடப்பட்ட வரலாறு களை சுட்டிக் காட்டினார். மண்டல் பரிந்துரை தனியார் துறை இடஒதுக்கீட்டை பரிந்துரைத்தது. குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், 2000ஆம் ஆண்டு குடியரசு தின உரையில் தனியார் துறை இட ஒதுக்கீட்டை வலியுறுத்தினார். 2002ஆம் ஆண்டு மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திக்விஜய்சிங் முதல்வராக இருந்தபோது 250 தலித் அறிஞர்கள் மற்றும் களப்பணியாளர்களை ஒன்று கூட்டி, விவாதித்து வெளியிட்ட ‘போபால்’ பிரகடனம், தனியார் துறையில் தலித் மக்களுக்கு இடஒதுக்கீடு; தலித் பிரிவினரை தொழில் முனைவ ராக்குதலுக்கான திட்டங்களை முன் வைத்தது. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது மத்திய மாநில உறவுகள் தொடர்பாக அரசியல் சட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் குறித்து நீதிபதி வெங்கடாசலய்யா குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு தனியார் துறைகளிலும் நீதித் துறையிலும் இடஒதுக்கீடு செய்யும் பரிந்துரையை வழங்கியது. இதைச் சுட்டிக்காட்டிய விடுதலை இராசேந்திரன், அமெரிக்கா மற்றும் அய்ரோப்பிய நாடுகளின் தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களில் கறுப்பர்கள் ஹிஸ்பெனிக்ஸ் (தென் அமெரிக்க நாடுகளிலிருந்து குடிபெயர்ந்தவர்கள்), அல்கசா (பழங்குடியினர்) மற்றும் அமெரிக்க இந்தியர்கள் ஆகிய மைனாரிட்டிப் பிரிவினருக்கு உரிய பிரதிநிதித்துவம் சட்டபூர்வமாக ‘உறுதி யாக்கும் செயல்பாடு’ (Positive Affirmation) ஒதுக்கி வைத்தலுக்கு ஈடுகட்டுதல் (Compuslory Discrimination) என்ற பெயரில் செயல்படுத்தப்படுவதையும் அதைக் கண்காணிப்பதற்கு சம வேலை வாய்ப்பு வாரியம் (Equal Employment Opportunity Corporation) செயல் படுவதையும் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவில் தனியார் தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை அதிகாரி களாக பார்ப்பன பனியாக்களே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதை சந்தோஷ் கோயல் என்ற ஆய்வாளர் 2082 தலைமை அதிகாரிகளை பேட்டிக் கண்டு ‘எக்னாமிக் அண்ட் பொலிட் டிக்கல் வீக்லி’ பத்திரிகையில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் விரிவாகப் பதிவு செய்துள்ளதை யும் ‘சூத்திரர்கள்’ உயர் அதிகாரிகளாக இருப்பது 4.2 சதவீதம் மட்டுமே என்பதையும் சுட்டிக் காட்டினார். தமிழகத்தின் மிகப் பெரும் தொழில் நிறுவனமான ‘டி.வி.எஸ்.’ குழுமம் பார்ப்பன நிறுவனமாகவே செயல்படுவதையும் சுட்டிக் காட்டினார். இரவு 7.30 மணியளவில் முதல் நாள் பயிற்சிகள் முடிந்தன.

இரண்டாம் நாள் முதல் வகுப்பாக தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, பாலின சமத்துவம் குறித்து விளக்கினார். விளையாட்டு, உரையாடல், விவாதங்களாக அவர் நடத்திய பயிற்சி, மாணவர்களை மிகவும் ஈர்த்தது.

தேனீர் இடைவேளைக்குப் பிறகு 11.30 மணியளவில் மருத்துவர் எழிலன், ‘மூடநம்பிக்கை’ குறித்து ஒளிப் படக் காட்சிகளுடன் வகுப்பு எடுத்தார். சோதிடம், வாஸ்து, பேய், பில்லி சூன்யம், ஜாதி, கடவுள் குறித்து அவர் தந்த விளக்கங்கள் மாணவர்களிடம் மிகுந்த தாக்கத்தை உருவாக்கியது. மாணவர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கமளித்தார். மதியம் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப் பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘இடஒதுக்கீடு’ வரலாறு குறித்து வகுப்பு எடுத்தார். நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் தொடங்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ‘சுதந்திர’ இந்தியாவின் நீதிமன்றங்கள் வழியாக பார்ப்பனர் களால் முறியடிக்கப்பட்ட வரலாறு; பெரியார் போராட்டத்தால் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அரசியல் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட முதல் சட்டத்திருத்தம்; அந்த சட்டத் திருத்தம் வழியாக பட்டியல் இனப் பிரிவினருக்குக் கிடைத்த கல்வியில் இடஒதுக்கீடு; பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்கள் அமைவதற்குக் காரணமாக இருந்த அம்பேத்கர் முயற்சியில் அரசியல் சட்டத்தில் இடம் பெற்ற 340ஆவது பிரிவு ஆகிய வரலாற்றையும் இப்போது ‘நீட்’ தேர்வு முறையால் ஏற்பட்ட பாதிப்பு; இதில் உச்சநீதிமன்றம் நடத்திய மோசடி, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்த உச்சநீதி மன்றத் தீர்ப்புகளை விரிவாக விளக்கிப் பேசினார்.

பயிற்சிப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் பயிற்சியால் கிடைத்த பயன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இரண்டு நாள் பயிற்சிக்கும் இடம் வழங்கி, உணவு ஏற்பாடுகளுக்கு பொறுப்பேற்று செயல்பட்ட மக்கள் மன்றத்துக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி நன்றி கூறினார். இரண்டு நாள் பயிற்சி களையும் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பாரி. சிவக்குமார் ஒருங்கிணைத்தார். காஞ்சி மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் இரவி பாரதி, தினேஷ் மற்றும் தோழர்கள் இரண்டாம் நாள் பயிற்சியில் முழுதும் பங்கேற்றனர்.

– **நமது செய்தியாளர்**

## ‘மோட்சம்’ போக உயிரை மாய்த்த குடும்பம்!

டெல்லியில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த 11 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பக்தி நம்பிக்கையில் மூழ்கிப் போன அந்தக் குடும்பம் வீட்டுக்குள் கோயில் கட்டி, இறப்பின் வழியாக ‘மோட்சம்’ போக முடியும் என்ற நம்பிக்கையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறது. உடலிலிருந்து பிரிந்த ‘ஆவி’ நேரடியாக ‘சொர்க்கம்’ போக வீட்டுச் சுவற்றில் தனித் தனியாக ஒவ்வொருவருக்கும் 11 குழாய்களைப் பதித்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கைகளை கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்கள். ‘மூடநம்பிக்கையால் குடும்பமே தற்கொலை’ என்று ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

“ஆத்மா, மோட்சம், நரகம், மறுபிறப்பு, பிதிர்லோகம் இவைகளைக் கற்பித்தவன் முட்டாள்; நம்புகிறவன் மடையன்; இவற்றால் பயன் அனுபவிக்கிறவன் மகா மகா அயோக்கியன்” என்று பெரியார் இயக்கம் கூறினால், இந்து மதத்தைப் புண்படுத்துவதாகக் கூப்பாடு போடுகிறார்கள்.

‘மனித ஆத்மாவுக்கு மரணமில்லை; அது மறுபடியும் பிறவி எடுக்கும்’ எனவே ‘மோட்சம்’ போகலாம்; ‘மரணம் இல்லை’ என்று ‘கீதை’யில் ‘கிருஷ்ண பகவான்’ கூறும் ‘தத்துவமே’ இந்த மரணத்துக்கு அடிப்படை. அதை நம்பியே இந்தக் குடும்பம் தன்னை மாய்த்துக் கொண்டிருக்கிறது.

பெரியார் இயக்கத்தை வசைபாடும் மத நம்பிக்கையாளர்கள், ‘இந்து-சந்து-பொந்து’ முன்னணிகள் மோட்சத்தை உண்மையாகவே நம்பி செயல்பட்டு, மரணித்துக் காட்டியிருக்கும் இந்தக் குடும்பத்தை, இதுதான் உண்மையான ‘இந்து’ பக்தி என்று பாராட்டியிருக்க வேண்டும்! ஏன் பாராட்டவில்லை? இந்த ‘மோட்சம் போகும் புனித மரணம்’ குறித்து காவல்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்துவது மதத்துக்கு எதிரானது; கீதைக்கு எதிரானது என்று அறிக்கை விட்டிருக்க வேண்டும்; ஏன் அறிக்கை விடவில்லை? ஆக இவர்கள் பேசும் ‘மத நம்பிக்கைகள்’ என்பது ஊரை ஏமாற்றும் அப்பட்டமான மோசடி என்பதை யாவது நேர்மையாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

‘மோட்சத்தை’ உண்மையாக நம்பி உயிரை மாய்த்துக் கொள்ள இங்கே எவரும் தயாராக இல்லை. மாறாக, திருவரங்கக் கோயில் பாதை வழியாக ‘சொர்க்கத்துக்கு’ நுழைய தயாராக இருக்கிறார்கள். இந்த சொர்க்கத்துக்கான பாதை மீண்டும் ‘பூலோகத்துக்கு’ சில நிமிடங்களில் கொண்டு வந்து சேர்த்து விடும். வெளியே வர வழியும் கதவும் இருக்கிறது என்ற பகுத்தறிவு நம்பிக்கை தான்!

இமயமலையில் ‘கைலாசம்’ அதாவது கடவுள்கள் வாழும் ‘சொர்க்கம்’ என்ற பகுதி இருக்கிறதாம். அதற்கு ‘கைலாஷ் மானசரோவர்’ என்று பெயர். இங்கே புனித யாத்திரிகையாகப் போய் கைலாசத்தை, அதாவது ‘மோட்சபூமியை’ப் பார்த்துவிட்டு மீண்டும் ‘பூலோகத்துக்கு’ அதாவது தங்கள் சொந்த ஊருக்கு திரும்பி விடுவோம் என்ற நம்பிக்கையோடு போன 1300 பேர் நேபாளம் அருகே ‘சிமிகோட்’ என்ற இடத்தில் இப்போது சிக்கிக் கொண்டு விட்டார்கள். இவர்களில் 19 பேர் சென்னையைச் சேர்ந்தவர்கள். கடும் மழை மற்றும் நிலச் சரிவு காரணமாக உணவு, உடையின்றி தவிக்கிறார்கள். இரண்டு பேர் மரண மடைந்து விட்டார்கள். இராணுவ விமானம் வந்தால் மட்டுமே எங்களைக் காப்பாற்ற முடியும் என்று கதறும் காட்சியை தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச் செய்கின்றன.

மோட்சத்தை உண்மையான நம்பிக்கையுடன் காணச் சென்றவர்கள் பிணமாகி விட்டார்கள். ‘மோட்ச’த்தை போலி நம்பிக்கையுடன் பார்க்கப் போனவர்கள் இராணுவ விமானம் மூலம் பூமிக்குத் (அதாவது சொந்த ஊருக்குத்) திரும்பக் கதறுகிறார்கள்.

இந்த மூடநம்பிக்கைகளில் சிக்கி அறிவைத் தொலைக்காதீர்கள்; ஆரியத்தின் சூழ்ச்சிக்கு பலியாகாதீர்கள் என்று பேசி வரும் பெரியாரிஸ்டுகள், பகுத்தறிவாளர்களின் கருத்தை இதற்குப் பிறகாவது, சிந்திக்க முன் வருவார்களா?

### ஆமைக் கறியிலிருந்து ஆஸ்திரேலியாக் கப்பல் வரை...

# சீமான் – பிரபாகரனை இழிவு செய்கிறார்

இன்றைக்கு சமூக வலைத்தளங்களிலும் இணையங்களிலும் பேசப்படுகின்ற ஆமைக் கறிக் கதை ஒன்றும் புதிது இல்லை. என்னுடைய ஞாபகப் பதிவுகள் சரியாக இருந்தால், இந்தக் கதை 2006, 2007களில் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அன்றைக்கு அது ஆமைக் கறி அல்ல. ஈழத் தமிழர் வழக்கில் ‘ஆமை இறைச்சி’.

சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் இணைய ஊடகங்கள் திடீர் என்று அதிகரித்தன. இந்த ஊடகங்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சில நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டன. அதில் முக்கிய நோக்கமாக தலைவர் பிரபாகரனை உல்லாச வாழ்க்கை வாழ்பவராக சித்தரிப்பது என்பதாக இருந்தது.

‘ஏழைப் பிள்ளைகள் களத்தில் சாக, தலைவர் பிரபாகரன் நீச்சல் தடாகத்துடன் கூடிய மாளிகையில் உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்’ என்று இந்த ஊடகங்கள் தொடர்ச்சியாக எழுதின. அப்படியே தலைவர் பிரபாகரன் ஆமை இறைச்சி விரும்பி உண்கிறார் என்றும், அதற்காக தாய்லாந்தில் இருந்து ஆமை இறைச்சி கொண்டுவரப்படுகிறது என்றும் பொய்யாக எழுதின.

ஆமை இறைச்சி கதையைப் பரப்பி தலைவர் பிரபாகரனை கேலியும் கிண்டலும் செய்வதற்கு புலி எதிர்ப்பாளர்கள் முற்பட்டார்கள். கவிதைகள், கேலிச் சித்திரங்கள் எல்லாம் வரைந்தார்கள்.

ஆமை இறைச்சிக் கதை என்பதே தலைவர் பிரபாகரனின் மாண்பைக் குறைப்பதற்காக புலி எதிர்ப்பாளர்கள் பரப்பி விடப்பட்ட ஒன்று. தலைவர் பிரபாகரன் தனது வாழ்நாளில் அதிக காலம் காட்டில் நின்று போராடியவர். இதன் போது உணவு கிடைப்பதே பெரும்பாடாக இருந்த காலங்களை அவர் அனுபவித்திருக்கிறார். கிடைத்தவற்றை உண்டும் எதுவும் கிடைக்காதபோது பட்டினியாகவும் வாழ்ந்திருக்கிறார்.

இப்படியான ஒரு போராளியாகவும், புரட்சியாளராகவும் தலைவர் பிரபாகரன் தமிழர் மனங்களில் நிறைந்திருந்திருப்பதைப் பொறுக்க முடியாமல், புலி எதிர்ப்பாளர்கள் அவரை ஒரு உணவுப் பிரியராகவும் உல்லாச வாழ்க்கை வாழ்பவராகவும் காட்டுவதற்கு படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்படியான ஒரு நாளில் தான் இந்தியாவில் இருந்து 14000 மெட்ரிக் டன் அரிசி ஏற்றிக் கொண்டு தென்னாப்பிரிக்கா நோக்கி பர்ஹா 3 என்கின்ற ஜோர்தானியச் சரக்குக் கப்பல் ஒன்று புறப்பட்டது. வழியில் முல்லைத் தீவுக்கு அண்மையில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு கப்பல் தத்தளிக்கத் தொடங்கியது. உதவிக்கு விரைந்த கடற்புலிகள் அதில் இருந்த 25 மாலுமிகளையும் காப்பாற்றி, கப்பலையும் கரை சேர்ந்தார்கள். தமது உயிரைக் காப்பாற்றியதற்காக மாலுமிகள் விடுதலைப் புலிகளுக்கு நன்றியை தெரிவித்தார்கள். அவர்கள் பத்திரமாக அவர்களுடைய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த மனிதாபிமான நடவடிக்கையும் அன்றைக்கு புலி எதிர்ப்பாளர்களால் கடற் கொள்ளையாகவும், வழிப்பறியாகவும் வர்ணிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அத்துமீறி கப்பலை மறித்து, தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இழுத்து வந்தது போன்றுதான் அன்றைக்கு புலிகளுக்கு எதிரான இணைய ஊடகங்கள் எழுதின.

2009இற்குப் பின்னர் புலிகளுக்கு எதிரான இணைய ஊடகங்களில் பெரும்பாலானவை காணாமல் போயின. மிஞ்சியுள்ள ஊடகங்களும் தமது பாதையை பெருமளவில் மாற்றிக் கொண்டன. போராட்டத்திற்கு தன்னையும் தன் குடும்பத்தையும் தலைவர் பிரபாகரன் அர்ப்பணித்து விட்ட பிறகு, இனியும் அவரைப் பற்றி அவதூறு எழுத வேண்டாம் என்று அவர்கள் சிந்தித்திருக்கலாம்.

ஆனால் யாருக்கோ இது பொறுக்கவில்லை. திடீரென்று ‘28 கிலோ ஆமைக் கறி சாப்பிட்டேன்’ என்றபடி சீமான் காட்சி தந்தார். தலைவர் பிரபாகரனை உண்மையாக நேசிப்பவர்கள் ஒருகணம் திடுக்கிட்டுத்தான் போனார்கள். சீமானின் நிகழ்ச்சி நிரல் எது என்று தடுமாறிப் போனார்கள். ஆயினும் சுதாரித்துக் கொண்டார்கள். இந்தக் கதையை சீமானை நோக்கியே திருப்பி விட்டு, அவரைப் பொய்யனாக்கி கேலி செய்து இந்தச் சதியை முறியடித்தார்கள். சற்றும் சளைக்காத சீமான் அடுத்து கப்பல் கதையோடு வந்தார். நல்ல வேளையாக 40000 டன் என்றும் ஆஸ்திரேலியாக் கப்பல் என்றும் உளறினார். ஆகவே இம்முறை அந்தக் ‘கதை’யும் இலகுவாக முறியடிக்க முடிந்தது.

விடுதலைப் புலிகள் மீதும், தலைவர் பிரபாகரன் மீதும் விமர்சனங்கள் வைப்பது வேறு. ஆனால் ஒரு உன்னதமான அர்ப்பணிப்பு மிகுந்த போராட்டத்தை நடத்திய தலைவரை உல்லாச வாழ்க்கை வாழ்ந்தவராக சித்தரித்து அவருடைய மாண்பைக் குலைப்பது வேறு.

தலைவர் பிரபாகரன் ஒரு போராளி. புரட்சியாளர். மாபெரும் தலைவர். உண்ணாமல், உறங்காமல் தமிழர்களுக்காகப் போராடியவர். கையை தலையணையாய் வைத்து அவர் உறங்கிய காலங்கள் அதிகம். உண்ணாமல் இருந்த காலங்கள் அதிகம். அதே வேளை அவருடைய போராட்ட வாழ்வில் அவர் மனநிறைவாய் ரசித்து ருசித்து உண்ட நாட்களும் நிச்சயம் இருந்திருக்கும்.

ஆனால் வரலாற்றில் எதைப் பதியப் போகிறோம் என்பதுதான் இங்கு கேள்வி. கொளத்தூர் மணி அண்ணன் சொன்னது போன்று, தட்டைகையில் ஏந்தி உண்கின்ற ஒருவராக தலைவர் பிரபாகரனை எதிர்கால சந்ததியினர் படிக்க வேண்டும் என்பதே அவரை உண்மையாக நேசிப்பவர்களின் விருப்பமாக இருக்கிறது.

**எழுத்தாளர் வி. சபேசன்**

# போராளிகள் சமூக விரோதிகளா? மத்திய மாநில அரசுகளைக் கண்டித்து கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டம் சார்பாக 20.06.2018 அன்று மாலை 4 மணிக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சி மற்றும் மக்கள் அதிகாரம் உள்ளிட்ட தோழர்களைக் கைது செய்து அடக்குமுறை சட்டத்தை ஏவும் காவல் துறையையும், மத்திய மாநில அரசுகளையும் கண்டித்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் வள்ளுவர் கோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகத் தோழர் கரு அண்ணாமலை முன்னிலை வகித்தார். தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி கண்டன ஆர்ப்பாட்டத்தை ஒருங்கிணைத்தார்.

ரவி பாரதி கண்டன முழக்கங்களை எழுப்பினார். தொடர்ச்சியாக இளந்தமிழகம் செந்தில், எஸ்.டி.பி.அய். தலைவர் தெகலான் பாகவி, இந்திய தேசிய லீக் ஆலிம் புகாரி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியைச் சேர்ந்த பெரியார் சரவணன், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி ஜெயநேசன், காஞ்சி மக்கள் மன்றம் மகேசு, மக்கள் அரசு கட்சித் தலைவர் வழக்கறிஞர் ரஜினிகாந்த், தமிழர் விடியல் கட்சி அருள் முருகன், மே 17 சுசீந்தரன், மனிதி மார்ட்டீனா மற்றும் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மத்திய மாநில அரசுக்கு கண்டனத்தை தெரிவித்தனர். இறுதியாக பெரியார் யுவராஜ் கண்டன முழக்கத்தோடு ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது.

மக்கள் போராளிகள் சமூக விரோதிகளா? அடக்கு முறை சட்டங்களைத் திரும்பப் பெறு! கைதானவர்களை விடுதலை செய்! என்ற முழக்கத்தை முன் வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

## சென்னை மாநாட்டில் கொளத்தூர் மணி பேச்சு

# ‘நீட்’ தேர்வைத் திணிக்க உச்சநீதிமன்றத்தில் நடந்த மோசடி

*ஏப்ரல் 30, 2018 அன்று தோழர் பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, இராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்-நீர் மறுப்பு- நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘நீட் திணிப்பு’ என்ற தலைப்பில் ஆற்றிய உரை. (21.6.2018 இதழ் தொடர்ச்சி)*

இட ஒதுக்கீடு இல்லை, எல்லோருக்கும் சம வாய்ப்பு என்று பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் சொன்னதைத் தான் இப்போது மெதுவாகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மருத்துவத்தில் முதுநிலை படிப்பவர்கள் குறைந்தது அரசிடம் ஐந்து ஆண்டுகள் பணிபுரிய வேண்டும். ஆனால் இப்போது, காலம் முழுவதும் செய்ய வேண்டுமென்றும் கூறுகிறார்கள். அதுகுறித்து நமக்குத் தெரியாது. இவர்கள் அரசு மருத்துவமனையில் தொடர்ந்து பணியாற்றாவிட்டால் 45 லட்சம் ரூபாய்க்கு பாண்ட் எழுதி கொடுத்துவிட்டுத் தான் வெளியே செல்ல வேண்டும். அதனால் நமக்கு மருத்துவர்களாக, அறுவை சிகிச்சை நிபுணர்களாக, உயர் சிகிச்சை மருத்துவர்களாக நம் மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் கிடைக்கிறார்கள். ஆனால் இனிமேல் நீட் அவர்களைக் கொடுக்குமா என்று தெரியாது. நீட் தேர்வில் தேர்வு பெறுபவன் அதற்குத் தயாராக இருப்பானா என்று நமக்குத் தெரியவில்லை.

நீட் தேர்வு நடக்கும் முறையைப் பற்றி சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம். முன்னதாக தனியார் மயம் என்று கூறினார்கள். தனியார் மயம் என்றால் அதற்குப் பார்ப்பன மயம் என்று பொருள். இப்போது அகில இந்திய தேர்வு என்கிறார்கள். அகில இந்திய தேர்வு என்றால் அதற்கு வடவர்கள் மயம் என்று பொருள். அகில இந்திய தேர்வு என்று வருகிற போதெல்லாம் அதில் வட நாட்டவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். குறிப்பாக அஞ்சல் துறைக்கு அகில இந்திய தேர்வை நடத்தினார்கள். தமிழ்நாட்டில் அஞ்சல் கொடுக்க வேண்டுமென்றால் தமிழில் முகவரியைப் படிக்கத் தெரிய வேண்டும். அதனால் தமிழுக்கு 25 மதிப்பெண்கள் கொடுக்கிறார்கள். இதில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவனும், அரியானாவைச் சேர்ந்தவனும் 25 மதிப்பெண்ணுக்கு 25 மதிப்பெண்கள் வாங்கினார்கள்.

தமிழ்நாட்டில் குழந்தைப் பருவம் முதல் தமிழில் பேசி, தமிழில் படித்தவர்கள் யாரும் 18 மதிப்பெண்ணுக்கு மேல் வாங்கவில்லை. இதில் அஞ்சல் துறைக்கே அய்யம் வந்து அந்தத் தேர்வை ரத்து செய்துவிட்டார்கள். வட இந்தியாவில் இப்படித்தான் தேர்வுகள் நடக்கிறது. அகில இந்தியத் தேர்வை எல்லாவற்றுக்கும் கொண்டு வந்துவிட்டார்கள். இங்கு வேலைக்கு வருபவர்களும் வட நாட்டவர்கள்தான் அதிகம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

நீட்டுக்கு ஒரே நாடு, ஒரே தேர்வு என்றார்கள். குஜராத்தில் தேர்வு எளிமையாக இருந்தது என்றும், மேற்கு வங்கத்தில் கடுமையாக இருந்தது என்றும், தமிழ்நாட்டில் ஆங்கில கேள்வித்தாள் கடினமாக இருந்தது, தமிழ் கேள்வித் தாள் கொஞ்சம் பரவாயில்லை என்றும் செய்தித்தாள்களில் செய்திகள் வெளியானது. இது எப்படி ஒரே தேர்வாகும்? ஒரே தேர்வு என்றால் ஒரே கேள்வித்தாள்தான் இருக்க வேண்டும். ஒரு மொழிக்கு ஒரு கேள்வித்தாள். அதில் ஒன்று கடினமாகவும், ஒன்று எளிமையாகவும் இருக்குமென்றால் அதற்கு என்ன அகில இந்தியத் தேர்வு என்று பொருள் என்பதுதான் நமது கேள்வி.

இந்த முறைகள் அனைத்தும் முதல் தலைமுறையாக, இரண்டாவது தலைமுறையாக கல்வி பெற்று வருகிற நமது கிராமத்துப் பிற்படுத்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பட்டியலின மக்களின் கல்வி வாய்ப்பைப் பறிப்பதற்கான மற்றும் எளிய மக்கள் தொடர்ந்து பெற்று வருகிற மருத்துவ சேவைகளை நிறுத்துவதற்கான முயற்சியாகத்தான் பார்க்க வேண்டும்.

இது மட்டுமில்லை, அனைத்துப் பணிகளுக்குமான பணியாளர் நியமனத் தேர்வுகளில் நடந்து வருகிற முறைகேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. நீட் தேர்விலும் கிராமத்து மாணவர்கள்தான் அதிகம் பாதிப்படைவார்கள் என்று நாம் சொன்னோம். அதுபோலவே இந்த ஆண்டு நீட் தேர்வில் கிராமத்து மாணவர்களை விட நகரத்து மாணவர்கள்தான் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சென்னையில் நீட் இல்லாமல், மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை இருந்தபோது 113 பேர் சேர்ந்தார்கள். நீட் வந்த பிறகு சென்னை நகரத்தைச் சார்ந்தவர்கள் இந்த ஆண்டு 471 பேர் சேர்ந்திருக்கிறார்கள். வேலூரில் 54 பேர்தான் நீட் தேர்வுக்கு முன்பு சேர்ந்திருந்தார்கள். நீட் வந்த பிறகு இந்த ஆண்டு 153 பேர் சேர்ந்திருக்கிறார்கள். கோயம் புத்தூரில் நீட் தேர்வுக்கு முன்பு 102 பேராக இருந்தவர்கள் இந்த ஆண்டு 182 பேராக அதிகரித்து விட்டார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இப்படித்தான் நீட் வந்த பிறகு நகர்ப்புற மருத்துவ மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து விட்டது.

ஆனால் கிராமத்தைப் பார்த்தோமானால், ஈரோட்டில் நீட் தேர்வுக்கு முன்பு 230 பேர் சேர்ந்திருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு 100 பேர் மட்டும்தான் தேறியிருக்கிறார்கள். தருமபுரியில் 225 பேர் நீட் தேர்வுக்கு முன்பு தேர்ச்சி பெற்றிருந்தார்கள். நீட் வந்த பிறகு 82 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். கிருஷ்ணகிரியில் நீட் தேர்வுக்கு முன்பு 338 பேரும், நீட் தேர்வுக்குப் பிறகு 82 பேரும் சேர்ந்திருக்கிறார்கள்.

பின்தங்கிய மாவட்டங்களிலும், கிராமங்களிலும் மருத்துவ படிப்புக்குத் தேர்வாகும் மாணவர்கள் நீட் வந்த பிறகு பாதிக்கும் குறைவாக குறைந்திருக்கிறார்கள் என்பததைத்தான் இது காட்டுகிறது. இதனால் சில ஆண்டுகள் கழிந்த பின்னால் கிராமத்திலிருந்து மருத்துவர் இல்லாத நிலையும், கிராமத்து மக்களுக்கு மருத்துவம் கிடைக்காத நிலையும் ஏற்படும். இப்படிப்பட்ட வஞ்சகம் நிறைந்த தேர்வைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சி.பி.எஸ்.சிதான் நீட் தேர்வை நடத்துவதாகக் கூறினாலும், இந்தத் தேர்வை அவர்கள் நடத்தவில்லை. ப்ரோ மெட்ரிக் என்ற அமெரிக்க நிறுவனம் தான் நீட் தேர்வை நடத்துகிறது. இந்த நிறுவனம் துணை ஒப்பந்தம் போட்டு சி.ஏ.எஸ்.அய்.டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்குக் கொடுத்து விட்டார்கள். இந்த நிறுவனம் ஒரு துணை ஒப்பந்தம் போட்டு மெசெர்ஸ் அபெக்ஸ் சர்வீஸ் லிமிடெட் நிறுவனத்துக்குக் கொடுத்துள்ளார்கள். முதுநிலை மருத்துவத்திற்கு கணினியில் தேர்வு நடக்கும். சில இடங்களில் இணைய வசதி அளிக்கப்பட்டு, இணையத்தில் பதிலைத் தேடி தேர்வெழுதியுள்ளார்கள். ஆம்மி அட்வின் (Ammyy admin)என்ற செயலி வசதியைப் பயன்படுத்தி தேர்வெழுதியுள்ளார்கள். இந்த முறையில் வெளியில் இருந்தும் செயலியை இயக்க முடியும். (அப்படியானால் தேர்வுக்கான விடையை வெளியிலிருந்து ஒருவர் கணினியைப் பயன்படுத்தி எழுதி அறையில் தேர்வு எழுதும் மாணவருக்கு அனுப்பி வைக்க முடியும்) இப்படி மோசடியாக தேர்வு எழுதி, பலர் மருத்துவராகியுள்ளனர் என்பது இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள்.

அதனால் எங்களுக்கு இதுபோன்ற மோசடி நடைமுறைகள் ஏதும் வேண்டாம். எங்கள் மருத்துவக் கல்லூரிகளில் எங்கள் மாணவர்களை சேர்த்துக் கொள்கிறோம் என்று கூறுகிறோம். இதற்குச் சட்டப்பூர்வமான விளக்கங்களை முந்தைய நீதிபதிகள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது தீர்ப்பு எழுதுகிற நீதிபதிகள் அதிக மதிப்பெண் வாங்கிய மாணவர்கள்தான் ஏதோ அறிவாளிகள் போல கருதுகிறார்கள். இதற்கு ஒரு விளக்கத்தை பிபி.சாவந்த் என்கிற நீதிபதி மண்டல் கமிசனுக்குத் தீர்ப்பு எழுதுகிறபோது சொன்னார். “அம்பேத்கர் மெட்ரிகுலேசன் தேர்வில் 37 1/2 விழுக்காடு மதிப்பெண்கள் தான் வாங்கினார். ஆனால் அவரை விட அறிவாளி இந்தியாவில் யார் இருக்கிறார்கள்? சொல்லுங்கள்” என்று தனது தீர்ப்பிலேயே சாவந்த் எழுதினார்.

கல்வி கற்கத் தொடங்கிய அந்தத் தொடக்க காலத்தில் அவ்வளவு மதிப்பெண்தான் வாங்க இயலும். ஆனால் இப்போதிருக்கிற நீதிபதிகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். நீட் கூடாது என்று 2013ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே தலைமை நீதிபதி உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வால் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் சீராய்வு மனு தாக்கல் செய்தார்கள். ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் சீராய்வு மனு தாக்கல் செய்தபோது அதே நீதிபதிகளிடம் சீராய்வு மனுவின் விசாரணையும் சென்றது. அதே நீதிபதிக்குத் தான் அதில் உள்ள பிழைகளை சுட்டிக் காட்டினால் தெரியுமென்று இவ்வாறு செய்தார்கள். ஆனால் நீட் தேர்வுக்கு 2013ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி அல்டாமிஸ் கபிர் அதே ஆண்டில் ஓய்வு பெற்றுவிட்டார்.

31.12.2015ஆம் தேதி இன்னொரு நீதிபதி விக்ரம் அஜித் சென் ஓய்வு பெற்றுவிட்டார். இவர்கள் இருவர் மட்டும்தான் 2013ஆம் ஆண்டில் நீட் தேர்வு கூடாது என்று தீர்ப்பு வழங்கினர். மற்றொருவரான அணில் தவே என்ற குஜராத்தை சேர்ந்த நீதிபதி மட்டும்தான் அப்போது நீட் தேர்வு வேண்டுமென்றார். அவரிடம் தான் மறு சீராய்வு மனு சென்றது. இவரைப் பற்றி மற்றொன்றையும் சொல்ல வேண்டும். “நான் மட்டும் சர்வாதிகாரியாக இருந்தால் கீதையை தொடக்கப் பள்ளியிலிருந்து பாடமாக வைப்பேன்” என்று சொன்னவர்தான் இந்த அணில் தவே (இவர் ஒரு பார்ப்பனர்).

மறு சீராய்வு மனு சென்ற முதல் நாளே, இந்த மனுவை விசாரித்துத் தான் தீர்ப்பு சொல்ல வேண்டும். அப்படித் தான் சட்டமும் சொல்கிறது என்று கூறிவிட்டு, பிறகு அவரே விசாரணை முடிந்து தீர்ப்பு வரும் வரையில் 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பை (நீட் தேர்வு கூடாது என்ற தீர்ப்பை) நிறுத்தி வைப்பதாகவும் கூறினார். தமிழகத்தில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீடு குறித்த வழக்கு ஒன்றை விஜயன் என்பவர் 1995ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்தார். 2018 வரையில் அந்த வழக்கு இன்னமும் விசாரணைக்கே வரவில்லை.

அதுபோலத்தான் நீட் தேர்வு வேண்டாமென்ற தீர்ப்புக்கு அணில் தவே பிறப்பித்த இடைக்கால தடை உத்தரவும் மீண்டும் எப்போது விசாரணைக்கு வருமென்று தெரியாது. இதை எதிர்பார்த்துக் காத்திருந்தால் நமக்கு நீதி கிடைக்குமா? அடுத்து நாம் என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. தன்மானம் மீட்பதற்கு தன்னுரிமை கொண்ட தமிழ்நாடாக இருந்தால் நமது சிக்கலை நாமே தீர்த்துக் கொள்ளலாம்.

’நீ வேறு மொழி பேசுகிறாய், நான் வேறு மொழி பேசுகிறேன். உன் உணவு முறை வேறு, என் உணவு முறை வேறு; உன் உடை வேறு, என் உடை வேறு; ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஆங்கிலேயனா என்னை ஆள்வது’ என காங்கிரஸ் ஆங்கிலேயர்களிடம் கேட்டது. பெரியார் காங்கிரஸ்காரர்களைப் பார்த்துக் கேட்டார், “நாங்களும் அதையேத்தான் கேட்கிறோம். இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவனா எங்களை ஆள்வது? மைல்தான் நான்காயிரம் குறைந்துள்ளது தவிர உனக்கும் எனக்கும் வேறு என்ன மாறிவிட்டது?” என்று. இப்போது அதே கேள்வியை நாமும் கேட்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

எங்கள் பண்பாடு அறியாத, எங்கள் உணர்வுகள் புரியாத, எங்களுடைய நடைமுறைகள் தெரியாத, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்துகொள்ள மறுக்கிற வடவர்களோடு இணைந்திருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு பெரியார் 1938ஆம் ஆண்டிலேயே பதில் சொன்னார். இப்போது 2018ஆம் ஆண்டில் நாம் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இத்தனை ஆண்டுகள் நாம் தள்ளிப்போனது போதும். விரைவில் முடிவெடுப்போம், என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

**செய்தித் தொகுப்பு : ர. பிரகாஷ்**

## சென்னையில் நிலத்தடி நீர் வற்றிவிடும் ஆபத்து

‘நிதி ஆயோக்’ (NITI AAYOG) அமைப்பு, ‘கூட்டு நீர் மேலாண்மை குறியீட்டை’ (Composite Water Management Index) ஜூன் 14 அன்று வெளியிட்டது. இந்தியா கடும் நீர்த் தட்டுப்பாட்டை எதிர் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் இந்த ஆய்வறிக்கை வெளியாகியிருக்கிறது. இந்த ஆய்வில் சென்னை உள்பட இந்தியாவின் 21 நகரங்களில் 2020-ம் ஆண்டுக்குள் நிலத்தடி நீர் முற்றிலும் வற்றிவிடும் என்ற அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியிருக்கிறது. அத்துடன், நாட்டின் தண்ணீர் பிரச்சினை இதே விதத்தில் தொடர்ந்தால் 2030-ம் ஆண்டில் நாட்டில் 40 சதவீத மக்களுக்கு தண்ணீரே கிடைக்காது எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம் ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘தீண்டாமை வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம்!’




வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் உச்சநீதிமன்றத் தீர்ப்பைத் திரும்பப் பெறக் கோரி சேலம் இரயில்வே சந்திப்பு முன்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், அம்பேத்கர் மக்கள் இயக்கம், ஆதித் தமிழர் பேரவை, அம்பேத்கர் இந்தியக் குடியரசுக் கட்சி, தீண்டாமை ஒழிப்பு முன்னணி போன்ற அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டார்கள்.

தலைமை தாங்கிப் பேசிய திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர் வைத்த வேண்டுகோள் சரியா தவறா என்று தீர்ப்பளிக்க வேண்டிய நீதிமன்றம், வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்குள்ளேயே நுழைந்து அதை நீர்த்துப் போகச் செய்தது. அக்கறை இல்லாமல் வழக்கை நடத்துவதாலும், சாட்சிகள் மிரட்டப்படுவதாலும் இந்தச் சட்டம் முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை என்கிறார்கள்.

ஆனால், இந்த வன்கொடுமை சட்டத்தைக் கொண்டு வர பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. ராஜீவ்காந்தி பிரதமராக இருக்கும் போது இச்சட்டம் கொண்டு வரப் பட்டது. வி.பி.சிங் பிரதமராக இருக்கும்போது இச்சட்டம் அமலுக்கு வந்தது. வாஜ்பாய் பிரதமராக இருக்கும்போது வகைப் படுத்தப்பட்டது. மோடி பிரதமராக இருக்கும் போது சட்டம் மேலும் திருத்தப்பட்டது. அனைத்து பிரதமர்களும் ஆதரவாகவே இருந்துள்ளனர்.

காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப வன்கொடுமைகளும் மாறிக்கொண்டே இருக்கிறது. வன்கொடுமை நவீன முறையில் அதிகரித்துள்ளது. படித்த இந்த சமுதாயத்தில்தான் இரட்டைக் குவளை முறைகளும், ஆணவப் படுகொலைகளும் நடைபெற்று வருகின்றன. இதை ஒழிப்பதற்கு எந்த அரசுகளும் முனைப்பு காட்டுவதில்லை. சட்டசபையில் தமிழகத்தில் ஆணவக் கொலையும், இரட்டைக் குவளை முறையும் இல்லை என்று பொய் பேசுகிறார்கள். இன்றளவும் சாதியத் தீண்டாமை இருந்து கொண்டே இருக்கிறது.

அதனால் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரக் கூடாது. இதற்கு மத்திய அரசு அவசரச் சட்டத்தை கொண்டு வந்து அரசியலமைப்பின் 9ஆவது அட்டவணையில் சேர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தீண்டாமையால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பு நீதிமன்றம் அமைத்து விரைந்து தண்டனை வழங்குவதோடு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை அரசு செய்ய வேண்டும். சமூக நல்லிணக்கத்துக்காக பாடுபடுபவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்க வேண்டும்” என்றார்.

# கோவையில் இரயில் மறியல்



“தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்திட்ட, தீர்ப்பைத் திரும்பப் பெற்று வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை 9ஆவது அட்டவணையில் இணைத்திடு” என்ற கோரிக்கையை வலியுறுத்தி 2.7.2018 அன்று தமிழகம் முழுவதும் இரயில் மறியல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு அதற்காக மக்களை திரட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டு கடந்த மாதம் 26, 27 இரு தினங்கள் வாகனம் பிரச்சாரப் பயணம் நடைபெற்றது. கோவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி. இராம கிருஷ்ணன் தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் இரயில் நிலையம் முன் திரண்டனர். காவல்துறைக்கும் தோழர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கே அமர்ந்து மறியல் போராட்டம் நடைபெற்றது. பின்னர் 378பேர் கைதாயினர். கு. இராமகிருஷ்ணன் (பொதுச் செயலாளர், த.பெ.தி.க.), யு.சிவஞானம் (தீண்டாமை ஒழிப்பு முன்னணி), சிறுத்தைச் செல்வன் (தமிழ்ப் புலிகள்), சுசி கலையரசன் (வி.சி.க.), நடராசன், முன்னாள் எம்.பி. (சி.பி.எம்.) மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பா. இராமச்சந்திரன், நிர்மல் குமார், விக்னேஷ், இயல், அமுல்ராஜ், மாதவன், நேரு தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலகக் கால்பந்து போட்டியை வேடிக்கைப் பார்க்கிறது ‘பாரதப் புண்ணிய பூமி’

பார்ப்பனர்கள் விளையாட்டாக மாறிவிட்ட ‘கிரிக்கெட்’ மட்டுமே இங்கு பிரபலமாக்கப்பட்டதால் கடும் உடல் சக்தியைப் பயன்படுத்தக் கூடிய ஒருவரை ஒருவர் தொட்டு முட்டி மோதி விளையாடக் கூடிய ‘கால்பந்து’ விளையாட்டுகள் ‘புண்ணிய பூமி’யில் ‘சூத்திரர்’ விளையாட்டாகிவிட்டன.

இரஷ்யாவில் நடக்கும் உலகக் கால்பந்து போட்டியில் இந்தியாவில் ஒரு மாவட்டத்தைவிட சிறிய பரப்பளவு கொண்ட அய்ஸ்லாந்து, துனிஷியா, பனாமா, செனகல் போன்ற நாடுகள் எல்லாம் பங்கேற்கும்போது இந்தியா வேடிக்கை பார்க்கும் நாடாகவே இருக்கிறது.

2002இல் உலகப் போட்டியில் இந்தியா பங்கேற்கும் என்றார்கள். 2010இல் உலகப் போட்டிகளில் பங்கேற்பதற்கான ‘டி சர்ட்டுகள்’ மட்டுமே தயாரிக்கப்பட்டன. இப்போது 2026இல் பங்கேற்கும் என்கிறார்கள். இதற்கான தயாரிப்புகள் ஏதேனும் நடக்கிறதா ? எதுவுமே இல்லை.

உள் நாட்டில் கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் பெரிய அளவில் நடத்தப்படுவது இல்லை. ‘கால்பந்து’ கிளப் ஏதும் கிடையாது. பார்ப்பன உயர்ஜாதியினர் கடுமையாக உடல் சக்தியைப் பயன்படுத்தக் கூடிய இந்த விளையாட்டைவிட ஒருவருக்கொருவர் தொட வேண்டிய தேவை இல்லாமல் கோடிகோடியாக பணமும் விளம்பரமும் கிடைக்கக்கூடிய ‘சூதாட்டப் புகழ்’ ‘கிரிக்கெட்’டை மட்டுமே நேசிக்கிறார்கள்.

ஆசிய நாடுகளுக்கான போட்டிகளில் இந்தியா 14ஆவது இடத்தில் இருக்கிறது. இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்குக்கூட அரசின் ஒப்புதலுக்காக மன்றாட வேண்டியிருக்கிறது என்கிறார் முன்னாள் தேசிய அணி வீரரும், தலைமைப் பயிற்சியாளருமான சய்யத் நயிமுதீன். கால்பந்து விளையாட்டையும் மதிப்பதில்லை; விளையாட்டு வீரர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு, பயிற்சிக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவது இல்லை என்று மனம் புழுங்குகிறார்.

இரஷ்ய நாட்டுக்கு கால்பந்து போட்டியைப் பார்க்க இந்தியாவிலிருந்து 14,000 பேர் போயிருக்கிறார்கள். சர்வதேசப் போட்டியில் இவர்கள் ஆர்வம் காட்டுவதைப்போல் உள்நாட்டுப் போட்டியில் ஆர்வம் காட்டுவதில்லையே, ஏன் ? பணம் செலவழித்து வெளிநாட்டுக்குப் போய் போட்டியை ‘இரசிக்கும்’ மனோபாவம் கொண்ட மேல்தட்டு வர்க்கம், இங்கே ஏன் அலட்சியப்படுத்துகிறது ? இதுவும் ‘மனுதர்ம’ மனப்போக்குதான். அர்ஜென்டினாவின் புகழ்பெற்ற கால்பந்து விளையாட்டு வீரர் லயோனல்மெஸ்ஸியை அர்ஜென்டினா நாடு உருவாக்கவில்லை. ‘லா மாகியா’ என்ற பார்சிலோனா நகரக் கால்பந்து அகாடமிதான் உருவாக்கியது. அத்தகைய கால்பந்துக்கான ‘கிளப்’களும் அகாடமிகளும் இங்கே உருவாக்க வேண்டும் என்கிறார், விளையாட்டு விமர்சகர் நோவிகபாடியா.

மாறாக, பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் விளையாட்டுப் போட்டிக்கான கோட்டாவில் மாணவர்கள் இடம் பிடிக்கும் வாய்ப்புகளை மட்டுமே இங்கே விளையாட்டுப் பயிற்சி அமைப்புகள் உருவாக்கி வருவது மிகப் பெரும் சோகம்.

சமஸ்கிருதம், யோகா, கீதை, புராணம், இஸ்லாமிய வெறுப்பு, ஜாதியப் பெருமைகளைக் கற்றுத் தந்தாலே போதும் என்கிறார்கள். இந்த ‘பாரத மாதா’ புதல்வர்களான ‘தேசபக்தர்கள்’, ‘பாரதமாதா’வுக்கும் இராமானுக்கும் கோயில்களைக் கட்டத் துடிக்கிறார்களே தவிர, இளைஞர்களின் ஆற்றலை விளையாட்டுத் துறைகளில் ஊக்குவிக்க ஆர்வம் காட்டவில்லை. மத்தியில் எந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் அது காங்கிரசாகவே இருந்தாலும் இதுதான் நிலை !

தற்போது விற்பனையில்
‘நிமிர்வோம்’ –
ஜூன் 2018 இதழ்

- வி.பி.சிங் பற்றி சிறப்புக் கட்டுரைகள்
- மசூதி இடிப்பை காந்தி ஆதரித்தாரா?
- அடிப்படையான பத்து கேள்விகளுக்கு அறிவியல் விளக்கம்
- அடையாளங்களை அழிக்கும் வடமொழி
- மோடியின் நான்கு ஆண்டு வேதனைகள்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...




தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th July 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN